**25.02.2020**

**பத்திரிக்கை செய்தி**

**விமான நிலைய மெட்ரோ முதல் மெப்ஸ் வரை கூடுதலாக டெம்போ டிராவலர் இணைப்பு சேவை இன்று (25.02.2020) முதல் தொடங்கப்பட்டுள்ளது**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மக்கள் பயன்பாட்டிற்கு பல போக்குவரத்து இணைப்பு சேவைகளான ஷேர் ஆட்டோ, ஷேர் டாக்சி, சென்னை மாநகர போக்குவரத்துக் கழகத்தின் சிறிய பேருந்து சேவை, மெட்ரோ சீருந்து இணைப்பு சேவை, இ-பைக் மற்றும் மிதிவண்டி ஆகியவற்றை சென்னை வாழ் மக்களுக்கு வழங்கி பயணிகள் தங்களது சேருமிடத்தை எளிதாகவும் விரைவாகவும் சென்று சேர்ந்திட பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

மேற்கண்ட வசதிகளுடன் கூடுதலாக, விமான நிலைய மெட்ரோ நிலையம் முதல் மெப்ஸ் இணைக்கும் குளிர்சாதன வசதியுடன் கூடிய டெம்போ டிராவலர் இணைப்பு சேவை, ரூ.20 கட்டணத்தில் இன்று (25.02.2020) முதல் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. இச்சேவை 30 நிமிட இடைவெளியில் இயக்கப்படும்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், ஏற்கனவே விமான நிலைய மெட்ரோ இரயில் நிலையம் முதல் பம்மல் வரை சென்றுவர 5 மெட்ரோ சீருந்து இணைப்பு சேவை மற்றும் 1 குளிர்சாதன வசதியுடன் கூடிய டெம்போ டிராவலர் இணைப்பு சேவைகளையும் விமான நிலைய மெட்ரோ இரயில் நிலையம் முதல் மெப்ஸ் வரை சென்றுவர 4 மெட்ரோ சீருந்து இணைப்பு சேவைகளையும் வழங்கி வருகிறது. இதனுடன் கூடுதலாக இன்று (25.02.2020) முதல் விமான நிலைய மெட்ரோ நிலையம் முதல் மெப்ஸ் வரை சென்றுவர 1 குளிர்சாதன வசதியுடன் கூடிய டெம்போ டிராவலர் இணைப்பு சேவை மெட்ரோ பயணிகளின் பயன்பாட்டிற்காக தொடங்கப்பட்டுள்ளது.